MCOP.No. 7/2019
Date : 28.10.2025
Pw – 1
பெயர்: சுப்பிரமணியன்
த/பெ: கருப்பையா

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் தனியார் பேருந்தில் பயணம் செய்தேன். அந்த தனியார் பேருந்தின் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் பயணம் செய்த பேருந்தின் உரிமையாளர் மற்றும் அந்த பேருந்தின் காப்புறுதி நிறுவனத்தை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பயணம் செய்த தனியார் பேருந்தில் கூட்டம் அதிமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். நான் தனியார் பேருந்தில் பயணம் செய்து கீழே இறங்கிய பிறகு எதிர்மனுதாரரின் பேருந்து என் மீது மோதியது. அடப்பன்காரசத்திரம் ரோட்டிலிருந்து அன்னவாசல் செல்லும் பிரிவு ரோட்டில் தான் விபத்து நடந்தது. பிரிவு சாலை அருகில் தான் விபத்து நடந்தது. என் மீது மோதிய அரசு பேருந்து திருச்சியில் இருந்து புதுக்கோட்டை வந்த பேருந்தாகும். விபத்தானது திருச்சி – புதுக்கோட்டை சாலைக்கு கிழக்கு பக்கம் நடந்தது. கிழக்கு பக்க ரோட்டில் இருந்து மேற்கு பக்கம் செல்வதற்காக நான் நின்று கொண்டிருந்தபோது தான் அரசு பேருந்து என்மீது மோதியது. விபத்து நடந்த இடத்தில் என்னுடன் சேர்ந்து வேறு ஆட்களும் நிறையபேர் இருந்தனர். அந்த இடத்தில் அரசு பேருந்து மோதியதில் எனக்கு மட்டும் தான் காயம் ஏற்பட்டது. வேறு யாருக்கும் காயம் இல்லை. நான் தான் திருச்சி – புதுக்கோட்டை ரோட்டை கவனமில்லாமல் அவசரப்பட்டு, கடந்த சமயத்தில் பேருந்து மீது மோதிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், அதன் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. விபத்திற்கு பிறகு புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு

சுமார் 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேற்படி விபத்தில் எனக்கு இடது பக்க முன்தலை, வலது பக்க தோள்பட்டைக்கு கீழ் ஆகிய இடங்களில் எனக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிய பின்புதான் நான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன் என்று சொன்னால் சரிதான். அரசு பேருந்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கான காயச்சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சொன்னாலும், அதனால் எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. என்னுடைய வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்று சொன்னாலும் அடிப்படை ஆதரவு அற்றது என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– சுப்பிரமணியன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.